**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.19/2022** |
| Sessions : | | | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for : | Prosecution : | **P.W. 14** |
| | Defence : | **D.W.** |
| | Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | அப்துல்மஜித்ஜாபர்சாதிக் | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **11.11.2025**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரசு தலைமை மருத்துவமனை பெரம்பலூரில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.01.2021 ம் தேதி காலை 11.15 மணியளவில் நான் பணியில் இருந்தபோது 60வயது நபருடைய பெயர் கருப்பையா என்பவரின் பிரேதத்தை பரிசோதிக்குமாறு அழைப்பு கடிதம் பெற்று பிரேதபரிசோதனையை 11.30 மணியளவில் தொடங்கினேன். அவரை பரிசோதித்தில் திட்டமான உடல்அமைப்பு, கண்கள், வாய் மூடிய நிலையில் காணப்பட்டது.

வெளிக்காயங்கள்

1.வெட்டுக்காயம் 1X0.5செ.மீ அளவில், நடுவயிற்றில் தொப்புளுக்கும் ஒரு செ.மீட்டருக்கும் மேல் முழு ஆழத்திற்கும் காணப்பட்டது.

2.சிராய்ப்பு காயம் 2 X1 செ.மீ இடது கையில் காயம் காணப்பட்டது.

உட்கூறு பரிசோதனையில் குரல் எலும்பு நன்றாக காணப்பட்டது.

நுரையீரல் கன்றிய நிலையில் காணப்பட்டது.

இருதயம் நன்றாக காணப்பட்டது. 30மில்லி அளவில் ரத்தம் காணப்பட்டது. வயிற்றில் கல்லீரல் கன்றிய நிலையில் இருந்தன. மண்ணீரலும் கன்றிய நிலையில் காணப்பட்டது. குடல் நன்றாக காணப்பட்டது. வயிற்றில் 400மில்லி ஜீரணமாகத சாதம் காணப்பட்டது. சிறுநீரகம் கன்றிய நிலையில் காணப்பட்டது. சிறுநீர் பையில் சிறுநீர் இல்லை. தலையில் எலும்பு நன்றாக காணப்பட்டது. மூளையில் இருபக்கமும் முன்தலையில் 250மில்லி ரத்தம் காணப்பட்டது. அதாவது Hematoma காணப்பட்டது. உள்உறுப்புகளை விஸ்ரா பரிசோதனைக்காக அனுப்பிவைத்தேன். பின்னர் விஸ்ரா அறிக்கை கிடைக்கப்பட்டது. அதில் விசபொருள்களோ, ஆல்ஹறாகல்லோ காணப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்து. மேலும் அவரை பரிசோதித்ததில் இறப்பிற்கான காரணம் அதிக ரத்தகசிவினாலும், மேலும் முக்கிய உறுப்பான மூளையில் பாதிப்பு இருப்பதாலும் இறப்பு ஏற்பட்டிருக்க கூறும் என்று கருத்து தெரிவித்து நான் பிரேத கூராய்வு அறிக்கை வழங்கினேன். நான் வழங்கிய பிரேத கூராய்வு அறிக்கை விஸ்ரா அறிக்கையுடன் கூடியது அ.சா.ஆ.7 ஆகும். முதல் காயம் என்னிடம் காட்டப்படும் இவ்வழக்கில் தாக்கல் ஆகியுள்ள கத்தியால் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

பிரேதகூராய்விற்கு முன்பு 8 மணி முதல் 20மணிநேரத்திற்குள் இறப்பு ஏற்பட்டிருக்கலாம். சவக்கிடங்கில் இருந்த பிரேதத்தை எடுத்துதான் பிரேதகூராய்வு செய்யப்பட்டது. பிரேதகூராய்விற்கு முன்பு உடலிலும், உடையிலும் சேறு இருந்ததை நான் பார்க்கவில்லை. முதல்காயமானது நீளவாக்கில் இருந்ததா அல்லது குறுக்கு வாக்கில் இருந்ததா என்று நான் குறிப்பிட்டு கூறவில்லை. என்னிடம் முதல்விசாரணையின் போது காட்டப்பட்ட கத்தியை போலிசார் காட்டி என்னிடம் கருத்துகேட்கவில்லை. நடந்து செல்லும்போது தடுமாறி ஒரு கூர்மையான பொருளின் மீது விழும்போது முதல்காயம் ஏற்பட வாய்புள்ளது. முதல்காயத்திலிருந்து சுமார் ஒரு மணிநேரத்தில் 50 முதல் 100 மில்லி வரை ரத்தம் வெளியேற வாய்புள்ளது.

இதன்காரணமாக உடனயாக மரணம் ஏற்பட வாய்பில்லை. முதல்காயம் ஏற்பட்ட நபர் காயத்திற்கு பின்பு நடக்க முடியும். அவ்வாறு நடக்கும்போது அதிகமான ரத்தப்போக்கு ஏற்பட வாய்புள்ளதா என்றால் Vessel காயமாக இருந்தால் அதிக ரத்தப்போக்கு ஏற்பட வாய்ப்புள்ளது. இறந்துபோன நபருக்கு Vessel காயம் இருந்ததாக பிரேதகூராய்வின் போது தெரியவில்லை. தலைப்பகுதியில் வெளிகாயங்கள் காணப்படவில்லை. வெளிகாயங்கள் ஏற்படாமல் Hematoma ஏற்பட வாய்ப்புள்ளது. ரத்தஅழுத்தம் காரணமாக அல்லது கட்டையால் அடித்தாலும், அல்லது தவறி கீழே விழுந்தாலும் Hematoma ஏற்பட வாய்புள்ளது. கடுமையான அல்சர் புண்களினால் முதல்காயம் ஏற்பட வாய்புள்ளதா என்றால் இல்லை. ஒரு ஆரோக்கியமான மனிதன் திட உணவை எடுத்துக்கொண்டால் அது செரிக்க எவ்வளவு நேரம் ஆகுமென்றால் வயிற்று பகுதியை விட்டு வெளியேற சுமார் 4 முதல் 6 மணிநேரமாகும்.

**மறுவிசாரணை**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.